1987 ஏப்ரல் 21]

சிவில் ஓர்க் எடுக்கின்ற நீதிபதிகள் சிவில் ஓர்க் எடுக்கிறார்கள், குறிப்பிட்ட காலத்திற்குத் தேவை என்றால் அவர்கள் கிரிமினல் சைடுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படுமானால் கிரிமினல் சைடுக்கும் அவர்கள் அனுப்பப்படுவார்கள் என்றும் உயர்நீதி மன்றம் கூறியிருகிறது. ஒட்டுமொத்தமாக உயர்நீதிமன்றத்தி னுடைய நோக்கம், ஒரு நீதிபதிக்கு 2 துறைகளிலும் பயிற்சி இருக்கவேண்டும் என்பதுதான் உயர்நீதிமன்றத்தினுடைய ஆழ மான நோக்கமாக இருக்கிறது.

(முற்பகல் 10-40)

திரு. டி. ஆர். வெங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டத் துறை மானியம் வரும்போது முழுமையாகப் பேசலாம்.

திருச்சி சப்-ஜெயில்.

431—(* வினா எண் 5135) திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் தற்போது சப்-ஜெயில் இருக்கும் இடத்தை நகராட்சிக்கு அளிக்குமாறு அரசு உத்திரவு ஏதேனும் அனுப்பி யுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதற்கான தொகையைத் திருச்சி நக ராட்சி செலுத்திவிட்டதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த இடத்தை நகராட்சி கேட்டு அரசுக்குக் குறிப்பு அனுப்பியிருக்கிறது. ஆகவே இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால் திருச்சி நகராட்சிக்கு வருவாய்

பெருகும். ஏற்கனவே இந்த அரசு அறிவித்ததைப் போல உள்ளூரில் இருக்கவேண்டிய ஸ்டேடியங்கள் வெளியிடத்தில் இல்லாமல் உள்ளூரிலேயே இன்டோர் ஸ்டேடியம் அமைப்பதற்கு ஏற்ற இடமாகவும், ஷாப்பிங் காம்பிளக்ஸ் அதிலே அமைப்பதற்கு ஏற்ற இடமாகவும், நகராட்சியினுடைய நிதி நிலையைப் பெருக்க வாய்ப்பு வசதி ஏற்படும் அளவுக்கு இது உருவாகக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே அதை மீண்டும் அரசு கவனித்து பரிசீலித்து இதை நடைமுறைக்குக் கொண்டுவருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நோக்கமும் அதுதான். நகராட்சியைப் பொறுத்தவரையில் நகராட்சிக்கு இந்த இடம் ஒதுக்கப்படுகிறபோது நகராட்சி பலன் உள்ள பணிகளுக்கு இந்த இடத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். அதற்காக நிர்ணயிக்கப்பட்டு இருக்கிற தொகை 22 லட்சத்து 80 ஆயிரத்து 696 ரூபாயை நகராட்சி செலுத்தவில்லை. அந்தப் பணத்தை செலுத்தியவுடன் அந்த இடத்தை அவர்களுக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

நகரங்களுக்குள் உள்ள சிறைச்சாலைகளை வெளியே மாற்றுதல்.

432—(* வினா எண் 9211) **திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகரங்களுக்குள் அமைந்துள்ள சிறைச்சாலைகளையெல்லாம் வெளியே மாற்றுகிற திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மத்திய சிறையினை மட்டும் நகருக்கு வெளியில் மாற்றும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது சொன்னார்கள், சென்னையில் உள்ள மத்திய சிறையினை